**கந்தகட்டிய பிரதேச சபை**
**பதுளை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 மார்ச் 6 ஆம் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 யூன் 30 ஆம் திகதியும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 2020 யூலை 22 ஆந் திகதியும் தவிசாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து கந்தகட்டிய பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இன் நிதிநிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டில் வருமானம் அறவிடுதல் காசு அடிப்படையில் செய்யப்பட்டதனால் முத்திரைக் கட்டணங்கள், சந்தை வாடகைகள், நீர் வரிகள், மற்றும் கடை வாடகைகள் வருமானம் ஆகியவற்றின் கூட்டுமொத்தம் ரூபா 1,645,548 பெறுமதிகள் குறைவாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | சரியான முறையில் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | சரியாக செய்ய நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (ii) | மீளாய்வாண்டிற்கான பெற்றுக்கொண்ட நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 2,100,745 ஆக இருந்தபோதிலும் காசு அடிப்படைப்படி ரூபா 3,252,886 பெறுமதியாக வருமானக்கூற்றில் ரூபா 1,152,141 கூடுதலாக காட்டப்பட்டுள்ளன. | சரியான முறையில் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | சரியாக செய்ய நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (iii) | மீளாய்வாண்டில் சபைக்கு சொந்தமான 2 நிலையான வைப்புக்களினால் கிடைக்க வேண்டிய ரூபா 444,563 பெறுமதியான வருமானம் நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டுவரப்படவில்லை. | சரியான முறையில் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும் | சரியாக செய்ய நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (iv) | கடந்த ஆண்டிற்கு சொந்தமான நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 290,395 பெறுமதியானவை நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டுவரப்படவில்லை. | சரியான முறையில் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும் | சரியாக செய்ய நடவடிக்கை எடுக்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (v) | மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு காசும் காசுக்கு சமமானவை ரூபா 2,931,319 ஆக இருக்க வேண்டிய போதிலும் ரூபா 4,582,072 ஆக காட்டப்பட்டமையால் ரூபா 1,650,753 ஆல் கூடுதலாக காட்டப்பட்டுள்ளது. | சரியான முறையில் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும் | சரியாக செய்ய நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (vi) | 2019 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு ரூபா 3,402,608 பெறுமதியான சந்தை கட்டிடங்கள் நிறைவு செய்துள்ள போதிலும் கணக்கில் காட்டப்பட்டிருக்கவில்லை. | சரியான முறையில் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும் | சரியாக செய்ய நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (vii) | மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு கடன்கொடுநர் மீதி ரூபா 4,909,848 ஆக இருந்தபோதும் அது ரூபா 6,389,499 பெறுமதியாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தமையால் 1,479,651 ஆல் கூடுதலாக காட்டப்பட்டுள்ளது. | சரியான முறையில் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும் | சரியாக செய்ய நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (viii) | மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு தீர்ப்பனவு செய்ய வேண்டிய ரூபா 2,427,809 பெறுமதியான வைப்புக்கள் பொறுப்பாக காட்டப்பட்டிருக்கவில்லை. | சரியான முறையில் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும் | சரியாக செய்ய நடவடிக்கை எடுக்கின்றேன். |

**(ஆ) கணக்காய்வுக்கென சாட்சிகள் இல்லாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 53,416,999 பெறுமதியான காணி மற்றும் கட்டடங்களுக்கு உறுதிப்பத்திரங்கள், இணைப்புக்கள், மற்றும் விலை மதிப்பீட்டறிக்கை என்பன கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்வில்லை. | கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துவதற்கு சாட்சிகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | சபைக்கு சொந்தமான காணிகள் சுவிகரிப்பதற்கு கோரியுள்ளேன். |

**1.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை | இணங்காமைகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக் சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | | | |
| | (i) நிதி ஒழுங்கு விதி 104 | 2019 மே 6 ஆந் திகதி சபைக்கு சொந்தமான உழவுஇயந்திரம் | நிதிப் பிரமானங்களின் பிரகாரம் | அது தொடர்பான நடவடிக்கைகள் தற்போது |

| | | | | |
|---|---|---|---|---|
| | | விபத்திற்குள்ளான இறுதி அறிக்கை சமர்ப்பித்திருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்க வேண்டும். | செய்யப்படுகின்றன. |
| | (ii) நிதி ஒழுங்கு விதி 571(2) | இரண்டு வருடத்திற்கு மேற்பட்ட 7 எண்ணிக்கையான ஒப்பந்த பிடிபணங்கள் ரூபா 268,047 பெறுமதியானவை தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமானங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (ஆ) | 1988 பிரதேச சபைகள் நிதி நிர்வாக ஒழுங்கு விதி 180 | ஊழிய பிணைப்பணம் தொடர்பான அலுவலர்களிடம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமானங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஊழியர் பிணைப்பணம் அறவிட நடவடிக்கை எடுக்கின்றேன். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டில் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 2,415,761 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,247,092 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | வருமான மூலம் | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிலுவைகள் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 1,803,740 | 5,140,940 | 1,601,077 | 380,186 | 3,276,501 | 3,375,500 | 4,135,141 | 692,717 |
| (ii) | வாடகைகள் | 3,475,561 | 169,200 | 1,706,475 | 43,150 | 769,200 | 769,200 | 136,400 | 43,150 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 661,000 | 497,150 | 497,150 | - | 848,000 | 556,450 | 556,450 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 456,000 | 465,679 | 465,679 | - | 130,000 | 130,000 | 540,787 | 2,715,700 |
| | மொத்தம் | 6,396,301 | 6,272,969 | 4,270,381 | 423,336 | 5,023,701 | 4,831,150 | 5,368,778 | 3,451,567 |

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2 வருடத்திற்கு மேலாக மீதி கீழ் கொண்டுவரப்பட்ட கிடைக்க வேண்டிய நிலுவை வருமானம் ரூபா 3,031,815 மீளாய்வாண்டில் அறவிடப்பட்டிருக்கவில்லை. | கிடைக்க வேண்டிய நிலுவை வருமானம் அறவீடு செய்யப்பட வேண்டும். | கிடைக்க வேண்டிய வரவுமீதிகள் சரியாக கணக்கீடு செய்யவும் அறவிட வேண்டிய நீர்வரி பதிவளிக்கவும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கின்றேன். |

### 2.2.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு அறவிட வேண்டிய ரூபா 4,269,512 பெறுமதியான நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் அறவிட வேண்டிய ரூபா 1,206,665 பெறுமதியான முத்திரைக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் நிலுவை முத்திரைக் கட்டணங்கள் அறவிடப்பட வேண்டும். | விரைவாக அவ் கட்டணங்களை அறவிட நடவடிக்கை எடுக்கின்றேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் பொதுச்சுகாதாரம், பொதுப்பயன்பாட்டுச்சேவைகள், பொது வழிகள், மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு

#### (அ) செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரித்தளிக்கப்பட்டிருக்கவில்லை. | செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும் | 2020 ஆம் ஆண்டில் செய்யப்படவுள்ளது. |

**(ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| சபை ஐக்கிய நாடுகள் சபையின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030 தொடர்பாக அறிவை பெற்றிருப்பினும் சபையுடன் தொடர்புபடுத்தி இனங்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி இலக்கு மற்றும் நோக்கு என்பவற்றை அளவிட்டுக்கொள்ளும் குறிகாட்டிகளை இனங்கண்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்கு மற்றும் நோக்கத்தை அளவீடு செய்யும் குறிக்காட்டிகளை இனங்கண்டு அதற்கிணங்க வருடாந்த இலக்குகளை அடைவது தொடர்பான விருத்தி மட்டத்தை அளவிட வேண்டும் | வரும் காலத்தில் இது சம்மந்தமாக நடவடிக்கை எடுக்கின்றேன் |

**3.2 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் 3 கடைகளுக்கு சொந்தமான நிலுவை கடை வாடகை ரூபா 72,600 அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறவிட வேண்டிய நிலுவை கடை வாடகையை அறவிடப்பட வேண்டும். | கொடுப்பனவு செய்யப்படாத நபர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. மற்றும் சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | சபையினால் களஞ்சியமாக பயன்படுத்தப்படும் கட்டிடம் உள்ள காணியின் உறுதிப்பத்திரத்தை உரிமைமாற்றம் செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணியின் உறுதிப்பத்திரத்தை உரிமைமாற்றம் செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | பிரதி காணி ஆணையாளருக்கு கோரிக்கை விடுத்துள்ளோம். |
| (இ) | இரு வருடங்களுக்கு மேலாக காணப்பட்ட ரூபா 9,215,967 பெறுமதியான சென்மதியாளர்கள் மீளாய்வாண்டிலும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | தீர்ப்பனவு செய்ய வேண்டிய நிலுவைகள் தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | தீர்ப்பனவு செய்ய நடவடிக்கைகள் எடுக்கின்றேன். |

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு 7 பதவிகள் தொடர்பாக 13 ஆளணிகள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. | தேவையான ஆளணி வெற்றிடம் நிரப்பப்பட வேண்டும். | உள்ளூராட்சி ஆணையாளர் திணைக்களத்திற்கு இது சம்மந்தமாக அறிவித்துள்ள போதும் இதுவரைக்கும் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

### 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்கீட்டுக் குறைபாடுகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு சொந்தமான டபுள் கப் வாகனம் ஒன்று பயன்படுத்தப்படாது 10 வருடங்களுக்கு மேலாக விளைவற்றிருந்தது. | விளைவற்ற சொத்து தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | சரியான முறையை பின்பற்றி திருத்தம் செய்ய நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (ஆ) | அரச பெறுகை வழிகாட்டியில் 5.4.8(அ) பந்திப் பிரகாரம் கந்தகட்டிய சந்தை நிலத்தில் உள்ள கட்டடம் நிர்மாணிப்பதற்கு ஒப்பந்த தொகை ரூபா 3,208,707 பெறுமதிக்காக 5 வீதம் செயற்பாட்டு பிணைப்பொறுப்பு ரூபா 179,794 குறைவாக அறவிடப்பட்டிருந்தது. மற்றும் ஒப்பந்தத்தின் இரு விடயங்களுக்கு ரூபா 83,490 பெறுமதியான கொடுப்பனவு செய்யப்பட்ட வேலைகளை விட கூடுதலாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. | பெறுகை வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மற்றும் கூடுதலாக வழங்கப்பட்ட கொடுப்பனவு அறவிடப்பட வேண்டும். | அந்த காலத்தில் இருந்து அலுவலர்களின் கவலையீனமான தவறினால் செய்யப்பட்டதாக பதில் வழங்கப்பட்டிருந்தது. மற்றும் பிடிபணத்தை செலுத்தும்போது அறவீடு செய்கின்றேன். |

**3.5 வருடாந்த பெறுகைத் திட்டம்**

| கணக்கீட்டுக் குறைபாடுகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான பெறுகைத்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகைத்திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | இனிவரும் வருடத்தில் தயாரிக்க நட்வடிக்கை எடுக்கின்நேன். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 கணக்காய்வு முகாமைத்துவ குழு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் கணக்காய்வு மற்றும முகாமைத்துவ குழு கூட்டம் ஒன்றும் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | குறைந்தது ஒவ்வொரு காலாண்டிற்கும் ஒன்றுப்படி கணக்காய்வு மற்றும முகாமைத்துவ குழு கூட்டம் நடாத்தப்பட வேண்டும். | கணக்காய்வு மற்றும முகாமைத்துவ குழுக் கூட்டம் நடாத்தப்படவில்லை. |

**4.2 உள்ளக கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான உள்ளக கணக்காய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வு செய்யப்பட வேண்டும். | இவ் வருடத்தில் உள்ளக கணக்காய்வு சரியான முறையில் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |